# 5

# சீர்திருத்தத்தின்போது ஆராதனையில் இசை

*சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், அதாவது பதினாறாம் நூற்றாண்டு சபையை வேதவசனத்துடன் இசைவிக்க முயற்சி செய்துகொண்டிருந்தவர்கள், ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துதல் பற்றிய கேள்வியை எதிர் கொண்டனர். இது ரோமன் கத்தோலிக்க சபையின் பழக்கமாகியிருந்தது. சபையானது ஆராதனையில், சொரூபங்கள், தூபவர்க்கம், மெழுகுவர்த்திகள், புனிதப்பொருட்கள் மற்றும் இன்னும் அதிகமானவற்றை அறிமுகப்படுத்தி இருந்தது. தொடக்ககால சீர்திருத்த வாதியான ஜான் விக்ளிஃப் (*c. *1328-84), இசைக்கருவிகளின் துணையற்ற பாடுதலை ஆதரித்தார்,*[1] *சபைகூடிப் பாடுதலை ஆதரித்த பொஹீமியாவைச் சேர்ந்த ஜான் ஹஸ் (*c. *1369-1415) என்பவரும், அதேபோன்று செய்தார்.*[2]

*சீர்திருத்த இயக்கத்தின் மிகப்பிரபலமான உறுப்பினரான, ஜெர்மன் நாட்டுத் துறவியான மார்ட்டின் லுத்தர் (1483-1546), சொரூபங்கள் மற்றும் இசைக்கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் என்ற விஷயத்திற்கு மாறான கருத்துக் கொண்டவராக இருந்தார். அவருடைய கருத்தில் இந்த விஷயங்கள் ஆராதனையில் சுதந்திரம் என்பதாக இருந்தன. இன்னொரு ஜெர்மனியரான கெர்ஹார்ட்டு கார்ல்ஸ்டாடட் (*c. *1480-1541) என்பவரும்கூட அவர்களை எதிர்த்தார். இசைக்கருவியை இசைப்பவர் இசை தொடர்பான விஷயங்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தால், அவரால் ஆராதனை செய்ய இயலாது என்று அவர் வாதிட்டார். சபைக்குழுமம் முழுவதும் இசைக்கருவிகளின் துணையின்றி பாடுதலை கார்ல்ஸ்டாடட் பரிந்துரைத்தார்.*

*ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜுரிச் என்ற நகரில் இருந்த ஹுல்ட்ரெய்க் சுவிங்கிலி (1484-1531) என்பவர் ஒரு முக்கியமான நிலைப்பாட்டை மேற்கொண்டார். சுவிங்கிலி சாதனை புரிந்த இசையாளராக இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து கட்டளையிட்டுள்ளவை மாத்திரமே சபை ஆராதனையின் பாகமாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். கிறிஸ்துவின் கட்டளையுடன் கூட்டப்பட்ட ஏதொன்றும் தவறான பயன்பாடாக உள்ளது என்று அவர் உறுதிப்படுத்தினார். இப்படிப்பட்ட போதனைக்குப் பதில் அளிக்கும் விதத்தில், சில ஆராதனை ஊழியங்களில் ஆர்கன் என்ற இசைக்கருவி பயன்படுத்தப்படுதல் ஒழிக்கப்பட்டது. இருப்பினும், எபேசியர் 5:19 மற்றும் கொலோசெயர் 3:16 ஆகிய வசனங்கள், குரலுடன் அல்ல ஆனால் இருதயத்தில் உள்ளாகப் பாடுதலைப் பேசுகிறது என்று சுவிங்கிலி விளக்கி உரைத்ததால், அவர் ஜுரிச் நகரில் இருந்த சபையில் வாய்ப்பாட்டையும் நீக்கிப்போட்டார். அவர் இல்லத்தில் சந்தோஷத்திற்காக இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார். சுவிங்கிலியைப் பின்தொடர்ந்தவரான ஹெய்ன்ரிச் புல்லிங்கர் (1504-75)*

என்பவரும் சபையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டை எதிர்த்து நின்றார்.

பிரான்ஸ் மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் சீர்திருத்த முயற்சிகளைத் தலைமையேற்று வழிநடத்திய ஜான் கால்வின் (1509-64)) என்பவர், "நமக்குப் பொருத்தமாகக் காணப்படுகிற எந்தக் கருவியையும் நாம் தழுவி ஏற்றுக்கொள்ளக்கூடாது, ஆனால் பரிந்துரைக்க முற்றிலும் தகுதியுள்ளவரான அவருடைய கட்டளைகளை மாத்திரமே நாம் கண்ணோக்க வேண்டும்'' என்று உரைத்தார்.[3] புதிய ஏற்பாட்டில் இசைக்கருவிகளின் பயன்பாட்டிற்கான கட்டளை அல்லது உதாரணம் எதுவும் இல்லாத நிலையில், அவற்றை சபையினுள் கொண்டுவர நமக்கு அதிகாரத்துவம் எதுவும் இல்லை. இசைக்கருவிகளின் தனிப்பட்ட பயன்பாட்டை எதிர்த்து நின்றிராத கால்வின், அவற்றைக் கிறிஸ்தவ சபைக்கூடுகைகளில் பயன்படுத்துவதை மாத்திரம் எதிர்த்து நின்றார். கால்வினைத் தொடர்ந்து வந்தவரான தியோடர் பேசா (1519-1605) என்பவரும் ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவதை எதிர்த்து நின்றார்.

இன்றைய நாட்களில், அடிப்படையில் இருந்தே சீர்திருத்தம் என்று அழைக்கப்படும், நெதர்லாந்து நாட்டின் மென்னோ சிம்மன்ஸ் (c. 1496-1561) என்பவர், வேத வசனங்களில் வெளிப்படையாகக் கட்டளையிடப்பட்டிராத எதையும் எதிர்த்து நின்றார். ஜான் நாக்ஸ் (c. 1514-72) என்பவர் ஸ்காட்லாந்தில் இதேபோன்ற கண்ணோக்குகளை மேம்படுத்தினார். ஸ்காட்லாந்தின் சீர்திருத்த சபைகள் இசைக்கருவியைத் தீவிரமாக எதிர்த்து நிற்பவைகள் ஆயின. தொடக்ககால ஆங்கிலேய சீர்திருத்தவாதிகள் இசைக்கருவிகளை எதிர்த்து நின்றனர், இருப்பினும் ஆங்கிலேய சபையானது கடைசியில் அவற்றைப் பயன்படுத்தும் பழக்கத்தைத் தழுவிக்கொண்டது. புதிய ஏற்பாட்டில் காணப்படும் கட்டளைகள் மற்றும் உதாரணங்களுக்கு ஏற்பத் தங்கள் பழக்கங்களை முறைப்படுத்திய, தொடக்கால பியூரித்தான்கள் அவற்றை [இசைக்கருவிகளை] எதிர்த்து நின்றனர்.[4]

பாஸ்டன் பியூரித்தான்கள் உட்பட, அமெரிக்க பியூரித்தான்களும் அந்தக் கண்ணோக்கைப் பற்றிக் கொண்டிருந்தனர். காட்டன் மேத்தர் (1663-1728) என்பவர், "தேவனை ஆராதிப்பதில் இசைக்கருவிகளை நியமித்தல் பற்றி ஒரே ஒரு வார்த்தைகூட புதிய ஏற்பாட்டில் இல்லை" என்று கூறினார்.[5]

இசை அல்லது நடனத்தை அனுமதித்திராத, நன்கு அறியப்பட்ட மெத்தடிஸ்ட் விளக்கவுரையாளரான மாத்யூ ஹென்றி (1661-1714) என்பவரின் எழுத்துக்களில், மற்ற எதிர்ப்புரைகள் காணப்படுகின்றன. இவை இரண்டும் ஒன்றாக இணைந்து செல்வதை அவர் கண்டார். ஐசக் வாட்ஸ் (1674-1748) என்ற புகழ்பெற்ற கீர்த்தனைகள் எழுதுபவர், பழைய ஏற்பாடு மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றின் அடிப்படையிலான இசைக்கருவிகளை உபயோகித்தலின் விவாதங்களை எதிர்த்து நின்றார். சார்லஸ் ஸ்பர்ஜன் (1834-92) என்ற புகழ்பெற்ற பேப்டிஸ்ட்டு பிரசங்கியார், 1880கள் என்ற தாமதமான ஆண்டுகளிலும்கூட இசைக்கருவிகளை மறுத்தார். சங்கீதம் 42:4 தொடர்பான ஒரு கலந்துரையாடலில் அவர், "இசைக் கருவிகளைக் கொண்டு துதித்தல் போலவே நாம் ஜெபமும் செய்யலாமே [மா]" என்று விளக்கம் அளித்தார்.[6]

குறிப்புகள்

[1]Gotthard Lechler, *John Wycliffe and His English Precursors,* trans. Peter Lorimer (London: Religious Tract Society, 1884), 298. [2]Gustave Reese, *Music in the Renaissance* (New York: W. W. Norton & Co., 1959), 732-33. [3]John Calvin, *The Necessity of Reforming the Church* (Edinburgh: Calvin Translation Society, 1844; reprint, Dallas: Protestant Press, 1999), 16. [4]Henry Wilder Foote, *Three Centuries of American Hymnody* (Cambridge, Mass.: Harvard University Press, 1940; reprint, Hamden, Conn.: Archon Books, 1968), 76-79. [5]Cotton Mather, *The Great Works of Christ in America* (London: N.p., 1702; reprint, Edinburgh: Banner of Truth Trust, 1979), 2:266. [6]Charles H. Spurgeon, *The Treasury of David* (Grand Rapids, Mich.: Zondervan, 1957), 1:272.